வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ——— ಈಳನಾಡು



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 06.10.2025 திங்கட்கிழமை | இதழ் : 279 | பக்கங்கள் : 08

# இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை: 'இனமோதல்' என்ற பதம் மீளவும் சேர்ப்பு

## மனித உரிமை பேரவையில் பிரிட்டன் இன்று சமர்ப்பிக்கும்

- இலங்கை வாக்கெடுப்பை கோராது

ஜெனிவா, ஒக்ரோபர் 06

**இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பிலான புதிய பிரேரணையின் இறுதி வரைவில் "இனமோதல்" என்ற சொற்பதம் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது.**

இந்தப் பிரேரணை இன்று திங்கட்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன், இந்தப் பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகி றது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த மாதம் முதலாம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது.

இதில், பிரிட்டன் தலைமையிலான கனடா, மாலாவி, மொன்டினீக்ரோ, வட மசிடோனியா உள்ளிட்ட இணையனுசரணை நாடுகளால் "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் முதலாவது வரைவு கடந்த மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இதையடுத்து, இந்த பிரேரணை தொடர்பில் கடந்த மாத நடுப்பகுதியில் உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற இலங்கை பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினர் தமது மாற்று அபிப்பிராயங்களை முன்வைத்திருந்தனர். இதன்

07

### சிறார் பாதிப்பு: 8,000 கடந்தது முறைப்பாடு

கொழும்பு, ஒக். 06

பாலியல் துஷ்பிரயோகம் உட்பட பல காரணங்களால் பாதிக்கப்பட்ட சிறார் தொடர்பான முறைப்பாடுகள் 8 ஆயிரத்தை கடந்துள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தேசிய சிறுவர் அதிகார சபையின் அதிகாரியான நிலந்தி புஷ்பகுமாரி தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான தேசிய

07

## தமிழ் அரசின் பிரேரணையை ஏற்றால் விரைவில் மாகாண சபைகள் தேர்தல்

### தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரி

கொழும்பு, ஒக். 06

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு பாராளுமன்றத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி முன்வைத்துள்ள தனிநபர் பிரேரணை களை ஏற்றால் விரைவில் தேர்தலை நடத்தமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "மாகாண சபைகள் தேர்தலை நடத் துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு எப்போ தும் தயாராகவே இருக்கிறது. எனினும், பாராளு மன்றம் அதற்கான அங்கீகாரத்தை வழங்க வேண்டியுள்ளது.

"புதிய தேர்தல் முறை என்பது, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை போன்று தொகுதி, விகிதாசார முறைமையிலா கலப்பு தேர்தல் முறையாக இருக்கும். எனினும், அந்தத் தேர்தல் முறைமைக்கு எல்லை நிர்ணயம் செய்வதே தடையாக இருக்கிறது.

"புதிய தேர்தல் முறைமைக்கு எல்லை நிர்ணயம் செய்யப்பட்டபோதிலும் அது நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நிராகரிக்கப்பட்டது. பின்னர், அது மீளாய்வு செய்யப்பட்ட போதிலும் மீண்டும் நிராகரிக்கப்பட்டமையால் புதிய தேர்தல் முறைமை

07

## வல்லிபுர ஆழ்வாருக்கு தேர் பல்லாயிரம் பக்தர்கள் திரள்வு

- சி.தில்லைநாதன், த.காண்டீபன், த.பிரதீப்ன் -



வடமராட்சி, ஒக். 06

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. இதில், நாடு முழுவதிலுமிருந்தும் புலம் பெயர் தேசங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.



நேற்று அதிகாலை முதல் கணபதீஸ்வர குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்களால் கிரியைகள்

07

## றக்பி வீரர் தாஜுதீன் கொலை; புதிய விசாரணைகள் ஆரம்பம்!

### அமைச்சர் நளிந்த அறிவிப்பு

கொழும்பு, ஒக். 06

றக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பில் புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

07

## நீதியை கோரும் தமிழருக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

### ஜெனிவாவில் சிறீதரன் கோரிக்கை

ஜெனிவா, ஒக். 06

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் தமிழ் இனப்படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் - சர்வதேச நீதியை எதிர் பார்க்கும் தமிழ் சிவில்

07

## நிறைவேற்று ஜனாதிபதி முறை; அரசாங்கம் பலப்படுத்துகிறது!

### ஐக்கிய மக்கள் சக்தி கட்சி

கொழும்பு, ஒக். 06

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாகக் கூறி ஆட்சியை ஏற்றவர்கள் இன்று, புதிய அரச மைப்பை உருவாக்குவதாகக் கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றனர். இந்த முறைமையை

07

## தாஜுதீன் கொலை விசாரணை; சர்ச்சைகளின்றி முடிவுறுத்துக!

### நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஒக். 06

தாஜுதீன் கொலை விசாரணை தொடர்ச்சியான சச்சரவுகள் இல்லாமல் முடிக்கப்பட வேண்டும் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

07

## வட, கிழக்கில் 100 பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை!

### இளங்குமரன் எம். பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 06

வடக்கு, கிழக்கில் 100 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எமது நாட்டை மூன்று ஆண்டுகளுக்குள் போதைப் பொருளற்ற நாடாக உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் எல்லோரின் இலக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 11 வீடுகளை அதன் பயனாளிகளிடம் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஏற்கனவே ஒரு கறுப்பு


07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வரலாற்று பிரசித்தி பெற்ற வடமராட்சி - துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் நேற்றைய தேர் திருவிழாவின் பதிவுகள்...

# மனித எலும்புக்கூடு, பணம் மாங்குளத்தில் மீட்கப்பட்டது

முல்லைத்தீவு, ஒக். 06

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் நகர் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் மனித எலும்புகூடு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. காணியின் ஒரு பகுதி பற்றைக் காடாக காணப்படுகின்ற நிலையில் குறித்த பகுதியில் நேற்று முன் தினம் எலும்புக்கூடு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் மாலை குறித்த பகுதிக்கு சென்ற நபர் ஒருவர் இதனை அவதானித்து மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற மாங்குளம் பொலிஸார் குறித்த இடத்தை குற்றப் பிரதேசமாக அடையாளப்படுத்தி விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தநிலையில் நேற்று காலை குறித்த இடத்திற்கு வருகை தந்த தடயவியல் பொலிஸார் குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த காணியில் மண்டையோடு மற்றும் எலும்புகள், சிறு தொகை பணம், நஞ்சு மருந்து, ஆடைகள் என்பனவும் அவதானிக்கப்பட்டுள்ளன.

இந்த நபர் யார் எங்கிருந்து வந்தார் எவ்வாறு உயிரிழந்தார் என்பது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிசார் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஒக். 06

அச்சுவேலி பத்தமேனியிலுள்ள வீடொன்றின் மீது, நேற்று முன் தினம் இரவு இனந்தெரியாதோர் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இரவு 10.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். வீட்டில் உள்ளவர்கள் வெளியில் வராது அயலவர்களை அழைத்த போது குறித்த தாக்குதல் நடத்தியவர்கள் வீட்டின் கதவுகளை உடைத்து சேதப்படுத்திச் சென்றுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# காங்கேசன் - நாகபட்டினம் கப்பல் சேவையை வாரத்தில் முழு நாள்களிலும் நடத்த தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 06

காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை வாரத்தில் அனைத்து நாட்களிலும் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இந்த மாதம் 8ஆம் திகதி முதல் இந்த மாதம் 28ஆம் திகதி வரை நாளாந்தம் குறித்த கப்பல் சேவை இடம்பெறும் என சிவகங்கை கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கே.எம்.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.


கடந்த காலத்தில் செவ்வாய்க் கிழமை தவிர்ந்த வாரத்தின் ஏனைய ஆறு நாட்களும் குறித்த சேவை இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் பண்டிகை காலத்தில் அனைத்து நாட்களிலும் சேவையை வழங்கும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கப்பல் சேவையில் தீர்வை அற்ற கடைத் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

(அ)

# தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீடுகள் பயனாளிகளிடம் கையளிப்பு!



யாழ்ப்பாணம், ஒக். 06

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் இவ்வாண்டு ஒவ்வொரு 10 இலட்சம் பெறுமதியான 88 வீடுகளில் 80 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வுகள் நேற்று அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெற்றது.

அந்தவகையில், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் கோண்டாவில் நாகபூசணி அம்மன் கோவிலடியில் பயனாளிக்கு ஒருவருக்கு நிர்மாணிக்கப்பட்ட வீடு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர், தேசிய மக்கள் சக்தியின் நல்லூர் பிரதேச சபை கௌரவ உறுப்பினர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-05)

# இளைஞரை காணவில்லை

மன்னார், ஒக். 06

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த சங்கர் அருண் என்ற 24 வயது இளைஞர் கடந்த 30 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அவரது தந்தை அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.


குறித்த இளைஞன் கடந்த 30 ஆம் திகதி தனது வீட்டில் இருந்து அடம்பன் பகுதிக்குச் சென்று வருவதாக கூறிச் சென்ற நிலையிலே இதுவரை வீடு திரும்பவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகன் வீடு திரும்பாத நிலையில் அவரது தந்தை அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த இளைஞன் குறித்து தகவல் தெரிந்தவர்கள் 076- 712 1294 அல்லது 077-0631135 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு குடும்பத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாநாடு நேற்று வவுனியாவில்!





வவுனியா, ஒக். 06

இலங்கை ஆசிரியர்சங்கத்தின் வவுனியா கிளையின் மாவட்ட மாநாடு சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்றது.

உலக ஆசிரியர் தினமான நேற்று அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைகளை முறியடித்து உரிமைகளை வென்றெடுப்போம் எனும் தொனிப் பொருளில் குறித்த மாநாடு முன்னெடுக்கப்பட்டது.

சங்கத்தின் வவுனியா கிளையின் தலைவர் பா.நேசராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின், தலைவர் பிரியந்த பெர்ணான்டோ, வடமாகாண உபதலைவர் தீசன் திலீபன், உபதலைவி ரசிக்கா உட்பட சங்கத்தின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.10.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 20

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஆளுநர்களின் அதிகாரம் ஆபத்தானது

“வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழிருப்பது ஆபத்தானது”, என்று சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்திருக்கிறார். முன்னாள் சபாநாயகரான கரு ஜெயசூரிய மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்று தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகிறார். மாகாண சபைகளுக்கான தேர்தல் பிற்போடப்பட்டு எட்டு வருடங்கள் நெருங்குகின்றன. இன்னும் பிற்போட்டால் ஒரு தசாப்த காலமாக மாகாண சபைகளுக்கான அரசியல் தலைமைத்துவம் இல்லாமலேயே மாகாண சபைகள் நிர்வாகம் இயங்கியிருக்கிறது என்னும் வரலாறு பதிவாகும்.

ஒரு தசாப்த காலமாக தேர்தல் நடைபெறாமலேயே மாகாண சபை நிர்வாகம் சிறப்பாக நடந்திருக்கிறது என்பது ஒன்று. ஒரு தசாப்த காலமாக தேர்தல் நடைபெறாதபோதும் அதனை ஒரு பொருட்டாகவே மக்கள் கருதவில்லை என்பது இன்னொன்று. மக்கள் உண்மையிலேயே, மாகாண சபைகள் தேர்தல் அவசியமென்று கருதியிருந்தால் அதற்காகக் குரல் கொடுத்திருப்பர். ஆனால், ஒரு தசாப்த காலமாக அதனை அவர்கள் பொருட்படுத்தவில்லை என்றால் அவ்வாறானதொரு மாகாண சபை ஏன் இந்த நாட்டுக்குத் தேவை என்னும் கேள்வி எழுப்பினால், அரசாங்கத்தின் வாதமே பலமடையும்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஆளுநர்கள் என்னும் விடயம் முதன்மை பெறுகிறது. வடக்கு மாகாண ஆளுநர் அவ்வப்போது அரசியல்வாதிகள் போன்றே அறிக்கை வெளியிடுகிறார். ஒரு வகையில் அங்கீகரிக்கப்படாத ஒரு முதலமைச்சர் போன்றே செயல்படுகிறார். “தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில்தான் வடக்கு மாகாணம் அபிவிருத்தியடையும்”, என்று கூறுகிறார். இது ஒரு வெளிப்படையான அரசியல் அறிவிப்பு. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள் முதலமைச்சர்கள் போன்றே செயல்பட்டனர்.

ஆளுநர்களின் அதிகாரம் என்பது மாகாண சபை உருவாக்கப்பட்ட காலத்தில் ஒரு விடயமாக இருக்கவில்லை. காரணம் அன்றைய அரசியல் சூழல் முற்றிலும் அப்போதிருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செல்வாக்கின் கீழிருந்தது. ஆளுநர் பெயரளவிலேயே இருந்தார்.

ஆனால், 2008இல் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று மாகாண சபைக்கான அரசியல் தலைமைத்துவம் ஏற்படுத்தப்பட்ட போதுதான் ஆளுநர் என்னும் அதிகார பூதம் முதன்முதலாக வெளிப்பட்டது. எல்லா விடயங்களிலும் ஆளுநரின் தலையீடுகள் இருந்தன. ஒரு கட்டத்தில் அப்போது முதலமைச்சராக இருந்த பிள்ளையான் - நான் முதலமைச்சர். ஆனால், என்னால் ஒரு நகர சுத்திகரிப்பு தொழிலாளரைக்கூட நியமிக்க முடியவில்லை”, என்று அதிருப்தியடையும் அளவுக்கு ஆளுநரின் தலையீடுகள் தலைவிரித்தாடின. வடக்கு மாகாண சபை விக்னேஸ்வரன் தலைமையில் இருந்த காலத்திலும் ஆளுநரின் தலையீடுகள் அவ்வப்போது பிரச்னையாக இருந்தன.

மாகாண சபைகள் வினைத்திறனாக இயங்க வேண்டுமாயின் ஆளுநர்களின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆனால், தமிழ்த் தேசிய தலைமைகள் என்போரோ இந்த விடயத்தில் இது வரையில் அக்கறை காண்பித்ததில்லை.

நீண்டு செல்லும் மன்னார் காற்றாலை விவகாரம்

# மக்கள் அரசாங்கம் என்ற வகையில் விட்டுக்கொடுப்புக்கு வரவேண்டும்

மன்னார், ஒக். 06

மன்னாரில் காற்றாலை விவகாரம் நீண்டு செல்லும் நிலையில் மன்னார் மாவட்டம் போராட்டத்தால் முடக்கப்பட்டுள்ளது. இந்த போராட்டத்தால் அரசாங்கம் பெரும் இடர்களை சந்தித்துள்ளது. மன்னார் மக்கள் தமது போராட்டம் நியாயமானது, அதற்கான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையில் போராடி வருகின்றனர். எனவே, மக்களின் அரசாங்கம் என்ற வகையில் அரசு விட்டுக் கொடுப்புக்கு வர வேண்டும் என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் என். எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளில் தற்போது காற்றாலை மின் உற்பத்தி செயல் திட்டத்துக்கான காற்றாலை கோபுரங்கள் அமைக்கின்றமை முதன்மை பெறுகிறது.

இந்த விடயம் மன்னார் மாவட்டம் மட்டுமின்றி உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் ஒரு பேசும் பொருளாக காணப்படுகின்றது.

இந்த அரசாங்கம் மக்களுக்கானது. மக்களின் கோரிக்கைகளுக்கு எதிராக நாங்கள் எதையும் செய்ய மாட்டோம் என்று கூறி மக்களிடம் வாக்குகளை பெற்று ஆட்சி அமைத்துள்ளது.

தற்போது மக்களின் கருத்து ஒரு விதத்திலும், ஜனாதிபதியினுடைய கருத்தும், அரசினுடைய கருத்தும் இன்னொரு விதத்திலும் அமைந்துள்ளமையை நாங்கள் தற்போது பார்த்து வருகிறோம்.

எனவே, எது எவ்வாறு இருந்தாலும் காற்றாலை விடயம் நீண்டு கொண்டு செல்கிறது.

மன்னார் மக்கள் தமது போராட்டம் நியாயமானது. அதற்கான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையில் போராடி வருகின்றனர். எனவே மக்களின் அரசாங்கம் என்ற வகையில் அரசு விட்டுக் கொடுப்புக்கு வர வேண்டும் - என்றார். (எ)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 250 கிலோ கடலட்டைகள் பறிமுதல்

இராமநாதபுரம், ஒக். 06

இலங்கைக்கு கடத்துவதற்காக இராமநாதபுரம் அருகே பதுக்கி வைத்திருந்த 250 கிலோ கிராம் நிறையுடைய கடலட்டைகள் மீட்கப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட கடலட்டைகள் இராமநாதபுரம் வனத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டன.

சுமார் 33 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பதப்படுத்தப்பட்ட கடலட்டைகளை பறிமுதல் செய்த கியூ பிரிவு பொலிஸார், கடலட்டைகளை பதுக்கி வைத்திருந்த ஒருவரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இராமநாதபுரம் - சக்கரக்கோட்டை நகராட்சி குப்பை கிடங்கு பகுதியில் கடலட்டைகள் பதப்படுத்தப்பட்டு வருவதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் நேற்று முன்தினம் அப்பகுதியில் தீவிர சோதனை நடத்தினர்.

கடலட்டைகளை பதப்படுத்திய கும்பலை மடக்கிப் பிடிப்பதற்காக சுற்றிவளைத்த பொலிஸார் ஒருவரை கைது செய்தனர். மூவர் தப்பிச் சென்றனர்.

இந்த நிலையில் அவரிடம் நடத்திய விசாரணைகளின்போது, தடை செய்யப்பட்ட கடலட்டைகளை தேவிபட்டினத்தில் இருந்து வாங்கி வந்து சக்கர கோட்டை குப்பை கிடங்கு அருகே உள்ள குடோனில் பதப்படுத்தி, பின்னர் கடல் வழியாக இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்தது தெரியவந்தது.

இராமநாதபுரம் புறநகர் பகுதியில் கடலட்டைகளை பதப்படுத்தி இலங்கைக்கு கடத்த முயற்சித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(எ-05)

# யாழ்ப்பாணம், மன்னாரில் கடும் மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஒக். 06

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் காலை வேளையிலும் கடும் மழை பெய்யக்கூடும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக்காலை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் பெரும்பாலான மாகாணங்களில் பிற்பகல் 01. 00 மணிக்குப் பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் நிலவுகின்றது

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் காலை வேளையில் மழை பெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.


எனவே, இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களின் போது பொது மக்கள் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**இடபம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை உருவாகும். புதிய நட்பால் ஆதாயமடைவீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்குள்ளாவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் சில இழப்புகள் ஏற்படும்.

**சிம்மம்**
கடினமான வேலையை மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக அமையும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வழக்கு விசேஷங்கள் சாதகமாகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**விருட்சிகம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறை நீடித்தாலும் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**தனுசு**
குடும்பத்துடன் கலந்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப்பொலிவு கூடும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனதில் இனம்புரியாத பயம் வந்துப் போகும். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போவது நல்லது. கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். வியாபாரத்தில் அவசர முடிவுகள் வேண்டாம்.

# கத்திக்குத்துக்கு இலக்காகிய கடை உரிமையாளர் மரணம்!

## சுன்னாகம் பொலிஸாரால் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 06

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலை கிழக்கு பகுதியில் வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக கத்திக்குத்துக்கு இலக்காகிய கடை உரிமையாளர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, ஏழாலை கிழக்குப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு மதுபோதையில் வந்த இரண்டு இளைஞர்கள் மிக்சர் தருமாறு கேட்டுள்ளனர். அப்போது கடை உரிமையாளர் பணம் தருமாறு கேட்டபோது மிக்சரை வாங்க வந்தவர்களுக்கும் கடை உரிமையாளருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதனையடுத்து கடை உரிமையாளர் மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், கடை உரிமையாளர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் ஏழாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த சிங்காரவேல் தானவன் (வயது -35) என்பவரே உயிரிழந்தார்.

சடலம் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களையும் சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர். (எ-3 -5)

# உணவு பொதிக்குள் ஹெரோயின் யாழ்.சிறையில் ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஒக். 06

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் உணவுப் பொதியினுள் ஹெரோயினை மறைத்து கொண்டு செல்ல முற்பட்டவர் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். இளவாலையை சேர்ந்த ஒருவரே 2 கிராம் 35 மில்லி கிராம் ஹெரோயினுடன்கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-3)

# பண்டாரிக்குளம் பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது



வவுனியா, ஒக். 06

வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸ் நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலைய கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜயசேகரவால் பெயர் பலகை திரை நீக்கம் செய்யப்பட்டு, நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மதத்தலைவர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்ன விஜயமுனி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பண்டாரிக் குளம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸார் எனப்பலரும் கலந்து கொண்டனர்.(எ-10)

# யாழில் சர்வமத மாநாடு



யாழ்ப்பாணம், ஒக். 06

யாழ். மாவட்ட சர்வமத பேரவை நடத்திய சர்வமத மாநாடு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். சிறிசற்குணராஜா, சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், யாழ். நாகவிகாரை விகாராதிபதி சிறி விமலதேரர், இமாம் சிவலப் பள்ளி காஷ்மி மௌலவி ஏ.எம். றழீம் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

“தேசிய ஒற்றுமையை நோக்கி எம்மை வழிநடத்தும் சமய விழுமியங்கள்” எனும் தொனிப்பொருளில் சர்வமதத் தலைவர்களின் சிறப்புரைகள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து சர்வமத மாநாட்டு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மேலும், சர்வமத பண்பாடுகளை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (எ-05)

# நடமாடும் வியாபாரங்களுக்கு முன் அனுமதி பெற வேண்டும்

## கரவெட்டி பிரதேச சபை செயலாளர்

யாழ்ப்பாணம், ஒக். 06

கரவெட்டி பிரதேச சபை எல்லைக்குள்

நடமாடும் வியாபாரங்களில் ஈடுபடுபவர்கள் முன் அனுமதி பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழைய பொருட்களை வாங்கி விற்கும் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் வீடு வளவுகளுக்குள் அத்துமீறி நுழைந்து பொருட்களை அடாத்தாக எடுத்துச் செல்லும் பல சம்பவங்கள் வடமராட்சி பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் பதிவாகியுள்ளன.

முதியவர்கள், பெண்கள், ஆளில்லாத வீடுகளை இனங்கண்டு இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பில் கரவெட்டி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் கம்ஸநாதனின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டபோது, நடமாடும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அனுமதியின்றி வீட்டு வளவுக்குள் நுழைவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை கருத்தில் கொண்டும் பிரதேச சபையின் அனைத்து பொறுப்பதிகாரிகளுக்கும் வருமானப் பரிசோதகர்களுக்கும் செயலாளரால் பின்வரும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வெளிக்கள கடமையில் ஈடுபடும் சபையின் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் பாதுகாப்பை தங்கள் சமூகக் கடமையாகக் கருதி வீதியில் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் அனைத்து வாகனங்கள், சாரதிகளின் விவரங்களையும் தங்கள் தினக்குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-05)

# நகை, வெளிநாட்டு பணம் திருடியவர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 06

நல்லூர் பகுதியில் உள்ள வீடொன்றில் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய வெளிநாட்டுப் பணமும் நகைகளும் அண்மையில் திருடப்பட்ட நிலையில் இந்தக் குற்றத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் திருட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர், பிரதான சந்தேக நபரைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து பெருமளவு நகைகளையும் வெளிநாட்டு நாணயங்களையும் கைப்பற்றினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண தேர்தல் இழுத்தடிப்புக்கு அரசின் பின்னடைவே முழு காரணம்



## சுமந்திரன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 06

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டுக் கூறத்தக்களவு பின்னடைவை சந்தித்தது. அதன் விளைவாகவே தேர்தலொன்றுக்கு முகங்கொடுப்பதற்கு அஞ்சி, மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிப்புச் செய்து வருகிறார்கள். அதனை எம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. தற்போது பழைய முறையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு ஏனைய கட்சிகளும் இணங்கியுள்ள பின்னிணியில், ஏற்கனவே அளித்த வாக்குறுதியின் பிரகாரம் உடனடியாகத் தேர்தல்களை நடாத்தவேண்டுமென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் இவ்வருடத்துக்குள் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டியது அவசியம் என வலியுறுத்தப்பட்டதுடன் அதற்கான சாத்தியப்பாடு குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

அக்கலந்துரையாடலில் பங்கேற்ற எதிரணி அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாம் ஆட்சிபீடமேறி ஒரு வருடகாலத்தினுள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என உத்தரவாதமளிக்கப்பட்டிருந்த நிலையில், அத்தேர்தல் இவ்வருடத்துக்குள் பழைய முறையில் நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தினர்.

அதுமாத்திரமன்றி ஏற்கனவே கடந்த பாராளுமன்றத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் சமர்ப்பிக்கப்பட்டு, தற்போது மீண்டும் சாணக்கியனால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மாகாண சபைத் தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பான தனிநபர் பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் பழைய முறையிலேயே தேர்தலை நடாத்த முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் இதுபற்றிக் கருத்துரைத்த சுமந்திரன்-

தேர்தலுக்கு முன்னர் யாழில் உள்ள தமிழரசுக்கட்சியின் அலுவலகத்துக்கு வருகை தந்து எம்மைச் சந்தித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, எம்மிடம் மாத்திரமன்றி ஊடகங்கள் முன்னிலையிலும் ஒரு வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடாத்தப்படும் என உறுதியளித்தார்.

அதுமாத்திரமன்றி கடந்த பாராளுமன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பில் நான் சமர்ப்பித்த தனிநபர் பிரேரணையை அநுரகுமார திஸாநாயக்க உள்ளடங்கலாக மக்கள் விடுதலை முன்னணியினர் முழுமையாக ஆதரித்தனர்.

அவ்வேளையில் எல்லை நிர்ணயம் செய்யவேண்டும் என அவர்கள் கோரவில்லை. பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலும் அவர்கள் அதுபற்றிப் பேசவில்லை.

அதேபோன்று மக்கள் விடுதலை முன்னணியினர் எல்லை நிர்ணயம் செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே முன்னரும் இருந்திருந்தால், அவர்களது தற்போதைய நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளமுடியும். இருப்பினும் இப்போதுதான் அவர்களது நிலைப்பாடு திடீரென மாறியிருக்கிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டுக் கூறத்தக்களவு பின்னடைவை சந்தித்தது. அதன் விளைவாகவே தேர்தலொன்றுக்கு முகங்கொடுப்பதற்கு அஞ்சி, மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிப்புச் செய்துவருகிறார்கள்-என்றார். (அ)

# பேருந்து-லொறி மோதி விபத்து!

கொழும்பு, ஒக். 06

நாரம்மல- குருநாகல் வீதியின் நாரம்மல நகருக்கு அருகில் லொறி ஒன்று இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கட்டுநாயக்கவிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துடன், குருநாகலில் இருந்து நாரம்மல நோக்கி பயணித்த லொறி மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறி சாரதியின் கட்டுப்பட்ட இழந்தமையே விபத்துக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் லொறியின் சாரதி, ஆண் ஒருவர் , 2 பெண்கள் மற்றும் இரண்டு குழந்தைகள் காயமடைந்த நிலையில் நாரம்மல மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட நிலையில் லொறியின் சாரதி, ஆண் ஒருவர் மற்றும் பெண் ஒருவருமாக மூவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர்கள் பொலனறுவையைச் சேர்ந்த, 41, 80 மற்றும் 82 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

குறித்த லொறியில் பயணித்த 40 வயதுடைய பெண், 16 மற்றும் 9 வயதுடைய இரண்டு சிறுமிகள் இன்னும் குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் நாரம்மல மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளின் பிரேத அறைகளில் வைக்கப்பட்டுள்ளன.

பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் நாரம்மல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# வரியில்லா வாகன அனுமதி நிறுத்தி வைக்க நடவடிக்கை

கொழும்பு, ஒக். 06

அரச சேவையின் மூத்த அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட வரியில்லா வாகன அனுமதிகள், எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் மீண்டும் வழங்கப்பட வாய்ப்பில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே வழங்கப்பட்ட சுமார் 23,000 அதிகாரிகளுக்கான அனுமதிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் மேலும் பல அதிகாரிகள் இந்த வசதிக்குத் தகுதி பெறுகின்றனர்.

எனினும், சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த இலக்கான - வருட இறுதிக்குள் 7 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு இருப்பு இலக்கை அடைவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இந்த வசதியை நிறுத்தி வைப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, வாகன இறக்குமதி காரணமாக மொத்த அந்நிய செலாவணி வெளியேற்றம் முதல் எட்டு மாதங்களில் 918 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# இலாப நோக்கங்களை கடந்தது மக்களின் அன்பு

## மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 06

நம்பிக்கை மற்றும் பரஸ்பர மரியாதையை அடிப்படையாகக் கொண்ட மக்களின் அன்பு இலாப நோக்கங்களுக்கு அப்பாற்பட்டது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது பேஸ்புக் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தமது வாழ்நாளின் பெரும்பகுதியை மக்களிடையே கழித்ததால், மக்களின் அன்பை நன்கு அறிந்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக, அதன் மதிப்பு எப்போதும் இல்லாத அளவுக்கு மேலும் அதிகமாகி உள்ளதாகவும், இது ஒரு அரசியல் உறவு மட்டுமல்ல, கடினமான ஒரு இதயப்பூர்வமான பிணைப்பு என்றும் அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

எனவே, அவற்றை உடைக்கும் முயற்சிகள் மூலம் இன்னும் அதிகமான பிணைப்புகளை வலுப்படுத்த முடியும் என்பதை சுட்டிக்காட்டிய முன்னாள் ஜனாதிபதி, மக்களுடன் செலவிடும் இந்த நேரம் முழுவதும் ஒரு தலைவராக தான் பெறக்கூடிய மிகப்பெரிய மகிழ்ச்சியை அனுபவிப்பதாகக் கூறியுள்ளார். (அ)

# எல்பிட்டியவில் துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, ஒக். 06

எல்பிட்டிய, ஓமத்தவில் உள்ள ஒரு வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் பிர வேசித்த நபர் ஒருவரால் குறித்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த துப்பாக்கிச் சூட்டில் வீட்டில் இருந்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன் வீட்டின் ஜன்னல் பகுதி துப்பாக்கிச் சூட்டின் போது சேதம் அடைந்துள்ளது.

மேலும் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# சுற்றுலா பயணிகளின் வருகை செப்ரெம்பர் மாதத்தில் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 06

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 971 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருட செப்ரெம்பர் மாதத்தில் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இது 30.24 சதவீத அதிகரிப்பாகும் எனவும் அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்ட சமீபத்திய தரவுகளின் படி, செப்ரெம்பர் மாதத்தில் இந்தியாவிலிருந்து 49 ஆயிரத்து 697 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அத்துடன் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் பிரித்தானியாவில் இருந்து 10,527 பேரும், ஜேர்மனியிலிருந்து 9,344 பேரும், சீனாவிலிருந்து 10,527 பேரும் மற்றும் பிரான்ஸிலிருந்து 5,144 பேரும் இலங்கைக்கு வந்துள்ளனர்.

அதன்படி, இந்த வருடத்தின் ஜனவரி 01 முதல் செப்ரெம்பர் 30 வரையான காலப்பகுதியில் இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 17 இலட்சத்து 25 ஆயிரத்து 494 ஆகும்.

இவர்களில் 3 இலட்சத்து 75 ஆயிரத்த 292 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்தும், ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 144 பேர் ரஷ்யாவிலிருந்தும், ஒரு இலட்சத்து 61 ஆயிரத்து 893 பேர் பிரித்தானியாவில் இருந்தும் வந்ததாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது. (அ)

# கீரி சம்பா பிரச்னைக்கு அரசிடம் தீர்வு இல்லை!

## தேசிய விவசாய ஒற்றுமை சங்கம்

கொழும்பு, ஒக். 06

டட்லி சிறிசேன மற்றும் அரிசி உற்பத்தியாளர்களுக்கு தேசிய விவசாய ஒற்றுமை சங்கம் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த சங்கம் தெரிவிக்கையில்-

டட்லி சிறிசேன அரசாங்கத்தை சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். ஒரு கோப்பையைக் கொண்டு அவர் குப்பைகளை மூடுவதற்கு முயற்சிக்கிறார். அவரிடம் அரிசியை இறக்குமதி செய்வார்களா என்று கேட்கும் போது, அதைப் பற்றி இன்னும் தீர்மானமில்லை என்கிறார். அதேபோல கீரிச் சம்பாவுக்கான தீர்வு என்ன என்பதற்கு எந்தத் தீர்வையும் தங்களால் வழங்க முடியாது என்கிறார். இலங்கையில் கீரிச் சம்பா அரிசியை அதிகளவில் விநியோகம் செய்பவர்தான் டட்லி சிறிசேன. 260 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டிய அரசியைத் தான் டட்லி 280, 300 ரூபாவுக்கு விற்பனை செய்கிறார். அரசாங்கம் என்ன செய்கிறது, டட்லி சிறிசேனவுக்கு ஏற்றாற் போல செயற்படுகிறது. இதனால்தான் கீரிச் சம்பாவுக்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு முறையான தீர்வொன்றை விவசாயத் திணைக்களம் வழங்கவேண்டும். கீரிச் சம்பா உற்பத்தியானது தொடர்ந்து குறைவாகவே காணப்படுகிறது. விவசாய திணைக்களம் எதற்காக இருக்கிறது? பாரிய அரிசி ஆலை உரிமையாளர்களின் கைத்தடி பொம்மையாக விவசாய திணைக்களத்தில் உள்ள அதிகாரிகள் சிலர் செயற்படுகின்றனர். இதில் அரிசி மாபியா ஒன்று உள்ளது. -என்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக்காக கொலை செய்யும் நிலை கடந்த காலத்தில் இங்கு காணப்பட்டது

## சிறிநேசன் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 06

கருத்து வெளியிடுபவர்களைப் பிடிக்காது விட்டால் அவர்களை அழிக்கும் செயல்பாடு கடந்த காலத்தில் இடம்பெற்றது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் அரகலய போராட்டம் ஒன்று நாட்டிலே இடம்பெற்றது. இதன் மூலமாக ஆட்சி மாற்றத்துக்குரிய அடித்தளம் போடப்பட்டிருந்தது. இதற்கு சமூக ஊடகங்களே பங்களிப்புச் செய்திருந்தன என்றும் அவர் கூறினார்.

சமூக ஊடக பிரகடனம் 2.0 சமூக ஊடக பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு, ஜனநாயக மதிப்புகள் - சிக்கல்கள்தொடர்பான விழிப்புணர்வை உருவாக்கும் திட்டம் மட்டக்களப்பு - கல்லடி தனியார் விடுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இதுவரையில் இந்த நாட்டிலே 45 ஊடகவியலாளர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டமைக்காக உயிரை கொடுத்திருக்கின்றார்கள். அதில், குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 28 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் சுமார் 14 ஊடகவியலாளர்களும் ஜே. ஆர். ஜெயவர்த்தன மற்றும் பிரேமதாஸவின் ஆட்சிக் காலங்களிலும் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நாங்கள் எடுத்து பார்க்கின்ற போது சில மட்டுப்பாடுகள், கட்டுப்பாடுகள் இருக்கத்தான் வேண்டும். சில விமர்சனங்களை பார்க்கின்ற போது நூற்றுக்கு நூறு வீதம் பொய்யானவையாகவும் இருக்கின்றன. சிலர் வெளியிடுகின்ற கருத்துக்களுக்கும் உண்மைத் தன்மைக்கும் எந்தவித தொடர்புகளும் இருக்கமாட்டாது. சமூக ஊடகங்கள் மிகவும் மோசமான கருத்துக்களை பரப்புகின்றன என்பது பற்றி நாம் யோசிக்கின்றோம்.

மறுபுறம் மிகவும் அறிவியல் ரீதியாக விமர்சிக்கின்ற சமூக ஊடகங்களும் இருக்கின்றன. அவை மிகவும் நாகரிகமான முறையில் தமது விமர்சனங்களை செய்து கொண்டிருக்கின்றன. இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் கூட இந்த சமூக ஊடகங்கள் பெரும் பங்களிப்பு செய்திருக்கின்றன. நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்ற ஆட்சியை மாற்றியமைப்பதற்கு சமூக ஊடகங்கள் பங்களிப்பு செய்திருந்தன.- என்றார்.

# முத்துநகர் விவசாயிகள் தொடர்ந்து போராட்டம்

திருகோணமலை, ஒக். 06

திருகோணமலை, முத்துநகர் விவசாயிகள் மாவட்ட செயலகம் முன்பாக கொட்டும் மழையிலும் நேற்று முன்தினம் சனிக்கிழமை 18 ஆவது நாட்களாக தொடர் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாங்கள் 53 வருடங்களாக விவசாயம் செய்து வந்த நிலத்தை தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக இலங்கை துறைமுக அதிகார சபையின் காணி என அப்பட்டமாக வழங்கி வைக்கப்பட்டதையடுத்து, அந்தக் காணிகளை மீளப் பெறக்கோரியே போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த முத்து நகர் விவசாய காணியில் சுமார் 800 ஏக்கர் அள வில் நில அபகரிப்பு செய்யப்பட்டு 200 ஏக்கருக்கும் மேல் தற்போது சுத்தமாக்கப்பட்டு விவசாய குளங்களை மூடிய நிலையில் சூரிய மின் சக்திக்காக கையகப்படுத்தியுள்ளனர்.

இதனால் தங்களின் ஜீவனோபாயமான விவசாய செய்கை முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். நேற்றைய தினம் சுதந்திரத்துக்கான பெண்கள் இயக்கம் இந்த சத்தியாக் கிரகப் போராட்டத்தில் இணைந்து "முத்து நகர் விவசாயிகளின் போராட்டத்துக்கு நாமும் ஒன்றிணைவோம்" போன்ற பதாகைகளையும் காட்சிப்படுத்தினர். இவ்வாறான நிலையில் விவசாய பூமியை பெற்றுத் தரக் கோரி பல போராட்டங்களை ஜனாதிபதி செயலகம் தொடக்கம் பிரதமர் அலுவலகம் வரை மேற்கொண்ட போதும் இது வரை உரிய தீர்வுகிடைக்கவில்லை எனக் கூறினர். கொழும்பில் இறுதியாக பிரதமர் அலுவலகம் முன் இடம்பெற்ற போராட்டத்தின் போது பிரதமர் தங்களுக்கு பத்து நாட்களுக்குள் தீர்வு வழங்குவதாக கூறியும் இன்னும் வழங்கவில்லை எனவும் முத்து நகர் விவசாயிகள் தெரிவித்தனர்.

அரசே எங்களுக்கு சோறு போடும் நிலத்தை மீட்டுத்தா?, விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளை நிலங்களை உடனடியாக திருப்பிக் கொடு, இந்திய கம்பனிகளின் நில மற்றும் வள திருட்டுக்கு எதிரான போராட்டத்தை தொடங்குவோம் போன்ற வாசகங்களையும் ஏந்தியவாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (எ-12)

# தவறான கருத்துக்களால் கலவரங்கள்கூட ஏற்பட்டன

## தேசிய மக்கள் சக்தி எம்.பி. பிரபு

மட்டக்களப்பு, ஒக். 06

கடந்த காலங்களில் தவறான கருத்துக்களை மக்களுக்கு கொண்டு சேர்த்து அவை மக்களுக்கு பரப்பப்பட்டு கலவரங்கள், குழப்ப சூழ்நிலைகள் இந்த நாட்டிலே இடம்பெற்றிருக்கின்றன. கருத்து தெரிவிக்கும் போது அதன் உண்மைத் தன்மை, அது சரியானதா என்பதை அவதானித்து - சிந்தித்து செயல்பட வேண்டியுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

சமூக ஊடக பிரகடனம் 2.0 சமூக ஊடக பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு, ஜனநாயக மதிப்புகள் - சிக்கல் கள் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்கும் திட்டம் மட்டக்களப்பு - கல்லடி தனியார் விடுதியில் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில், கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் சமூகத்திலேயே ஒருவர் அவரின் தனி மனித உரிமை சார்ந்த விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். நாணயத்துக்கு இரு பக்கங்கள் இருப்பது போன்று சட்டங்களிலும் நன்மை- தீமைகள் இருக்கின்றன. இந்த இரண்டு விடயங்களையும் கருத்தில் கொண்டுதான் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. அந்த வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் கருத்துக்களை வெளியிடுகின்றவர்கள் தொடர்பிலும் அவர்களை பாதுகாப்பு தொடர்பாகவும் சிறந்த கருத்துக்களை மக்களுக்கு கொண்டு சேர்க்கின்ற விடயங்கள் தொடர்பிலும் கருத்தில் கொள்ள வேண்டும்.

சில சமூக ஊடகங்களில் நாங்கள் பல கருத்துக்களை அவதானித்திருக்கின்றோம். எம்மைகூட தவறானதாக சமூக ஊடகங்களில் சித்திரித்து காட்டப்படுகின்றன. அவ்வாறான ஊடகங்களை பயன்படுத்துகின்றவர்கள் உண்மையான தகவல்களை சேகரித்துக் கொண்டு கருத்துக்களை வெளியிட வேண்டும்-என்றார். (எ)

# ரூ.4 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது

கொழும்பு, ஒக். 06

பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 4 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்களுடன் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் ஹபராதுவை, பத்தேகம பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 5.6 கிலோ நிறையுடைய ஹஷிஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. கைதானவர்களில் ஒருவர் திட்டமிட்ட குற்றவாளியான மிதிகம ருவானின்'நண்பர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டின் 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 06

தொடரும் மழையுடனான வானிலை காரணமாக நாட்டின் 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கை ஒன்றை விடுத்து இதனை அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி, பதுளை மாவட்டத்தின் ஹாலி எல, எல்ல, பதுளை மற்றும் பசறை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகள், குருநாகல் மாவட்டத்தின் நாரம்மல, மாத்தளை மாவட்டத்தின் உக்குவலை மற்றும் ரத்தோட்டை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு முன் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை, மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர மற்றும் பிபிலை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

மண்சரிவு முன்னெச்சரிக்கை காலப்பகுதியில் நிலத்தில் வெடிப்பு உருவாகுதல், ஆழமாகும் வெடிப்புகள் தரை உள்ளிறக்கங்கள், நிலத்தில் இருந்து திடீரென நீர் ஊற்றுக்கள் ஏற்படுதல் உள்ளிட்ட அறிகுறிகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மண்சரிவு அபாயம் கொண்ட பகுதிகளில் இருந்து உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (எ)

# விபத்தில் சிக்கிய இளைஞன் மரணம்

கல்முனை, ஒக். 06

விபத்தில் சிக்கிய 20 வயது இளைஞன் உயிரிழந்தார். அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல் ஹிதாயா பாடசாலை வீதி-கூழாவடி சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வந்த இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 02 ஆம் திகதி இரவு வேளையில் கனரக வாகனத்தை ஏற்றி பயணித்த உழவியந்திரத்தை முந்திச் செல்ல முயற் சித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் சாரதி படுகாயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

சம்மாந்துறை மலையடிக்கிராமம் 03 பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய அப்தல் நஸீர் முகமட் அஸீல் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.(எ-01)

# பாவிக்க முடியாத நிலையில் வெளிச்சவீடு சிறுவர் பூங்கா

## பொதுமக்கள் கடும் விசனம்

மட்டக்களப்பு, ஒக். 06

மட்டக்களப்பு மாநகர சபைக்கு சொந்தமான முகத்துவாரம் வெளிச்சவீடு சிறுவர் பூங்கா குப்பைகள் நிறைந்து துர்நாற்றம் வீசி வருவதால் சிறுவர்கள் விளையாட முடியாது பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக பொதுமக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த நிலையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு அந்த பகுதியில் அமைந்துள்ள வெளிச்சவீடு மற்றும் அதற்கு அருகில் வாவிக்கரையில் அமெரிக்க மக்களின் நிதிப் பங்களிப்பின் ஊடாக யூ.எஸ். எய்ட்ஸ் நிறுவனம் பல இலட்சங்களை கொண்டு சிறுவர் பூங்கா அமைத்து மாநகர சபையிடம் கையளித்து மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டது.

மட்டு. மாநகர சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள இந்த சிறுவர் பூங்கா பல காலங்களாக கவனிப்பாரற்று கிடக்கின்றதுடன், அங்கு பல இலட்சம் ரூபாய் செலவில் பொருத்தப்பட்ட ஊஞ்சல்கள், சறுக்கல் மற்றும் மிருகங்கள் உருவம் கொண்ட விளையாட்டு உபகரணங்கள் உடைந்து துண்டு துண்டாக கிடக்கின்றன.

இதேவேளை அங்கு அமைக்கப்பட்ட மலசல கூட கதவுகள் உடைக்கப்பட்டு சேதமடைந்துள்ளதால் அதனைப் பாவிக்க முடியாதுள்ளதுடன், அந்த பகுதியில் கழிவுப் பொருட்கள் அகற்றப்படாததால் அதிலிருந்து துர்நாற்றம் வீசி வருகிறது என்றும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

# மூதூரில் வீடுகள் கையளிப்பு

திருகோணமலை, ஒக். 06

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய வீடற்ற நபர்களுக்கு வீடு வழங்கப்பட்டதற்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நிறைவடைந்ததும் கடந்த 3 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் ரீ.பீ. சரத் குறித்த தெரிவு செய்யப்பட்ட வீடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

இதன்போது பட்டினமும் சூழலும், மூதூர், கிண்ணியா, தம்பலகாமம் ஆகிய பிரதேச செயலகப் பிரிவிகளில் தெரிவு செய்யப்பட்ட வீடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு திறந்து வைத்ததோடு மட்டுமின்றி பயனாளிகளின் குறை நிறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த பயனாளிகளின் வீட்டு வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகளும் பிரதி அமைச்சரால் நடப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8,000....

கட்டமைப்பை நிறுவுவதே தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையின் பிரதான நோக்கமாக உள்ளது. இதற்கான தேசிய கொள்கையும் காணப்படுகிறது.

சிறுவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கத் தேவையான சட்ட, சமூக மற்றும் நிறுவன சீர்திருத்தங்களுக்கான அடித்தளமாக அந்தக் கொள்கை செயல்படுகிறது. சிறுவர்களின் உரிமைகள் மீறலுக்கு பதிலளிப்பதற்கு இலங்கையில் அரசு, அரசு சாரா நிறுவனங்கள் மூலம் வழிமுறைகள் இருந்தாலும் ஒருங்கிணைப்பு மற்றும் சரியான செயல்படுத்தல் இல்லாமை பெரும் தடையாக உள்ளது.

சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் பங்களிக்கிறது. ஆபாச இணையத்தளங்கள் மற்றும் பல்வேறு நாடுகளில் உள்ள வேறுவகையான வலைத்தளங்களில் இலங்கை சிறுவர்களின் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் நிர்வாண புகைப்படங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

ஒவ்வொரு குழந்தையும் வன்முறை, சுரண்டல், துஷ்பிரயோகம், புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். அதேநேரத்தில் அவர்களின் ஒட்டுமொத்த பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

## இலங்கை...

பின்னணயில், இலங்கை தொடர் பான இணையனுசரணை நாடுகளின் புதிய பிரேரணை முதலாம் கட்ட மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, திருத்தங்களுடனான பிரேரணை கடந்த மாத இறுதியில் வெளியிடப்பட்டது.

அந்தப் பிரேரணையில் இனமோதல் என்பதற்கு பதில் மோதல் என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டது. அத்துடன், சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆராய விசேட சட்டவாதியின் பங்கேற்புடனான பிரத்தியேக நீதித்துறை பொறிமுறை ஒன்றை நிறுவுவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்த விடயம் முற்றாக நீக்கப்பட்டிருந்தது.

எனினும், திருத்தப்பட்ட அந்தப் பிரேரணை பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான கோரிக்கையை நீர்த்துப் போகச்செய்யும் விதமாக அமைந்திருப்பதாக பல தரப்பினரும் விமர்சித்திருந்தனர்.

இதையடுத்து, இன்றைய தினம் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையின் இறுதி வரைவில் "இனமோதல்" என்ற சொற்பதம் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்த விடயம், "இனமோதல்களின் விளைவாக இலங்கை முகங்கொடுத்த மிகமோசமான துன்பங்களை இலங்கை அரசாங்கம் அங்கீகரித்தமையையும் பிரிவினையை ஏற்படுத்தக் கூடிய இனவாத அரசியலுக்கு இடமளிக்காமல் இருப்பதற்கான அதன் கடப்பாட்டை யும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதுடன், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் வரவேற்கின்றோம்" என்றவாறு மாற்றப்பட்டுள்ளது.

இன்றைய தினம் சமர்ப்பிக்கப்படும் இந்தத் திருத்தப்பட்ட பிரேரணையின் உள்ளடக்கத்தை நிராகரித்து இலங்கை எதிர்ப்பை வெளிப்படுத்தினாலும் அதனை நிறைவேற்றுவதற்கு வாக்கெடுப்பை கோராது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், புதிய பிரேரணை இன்றைய தினம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படலாம். நிறைவேற்றப்படும் தீர்மானத்துக்கு அமைய மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் இலங்கை தொடர்பில் பேரவையின் 63 ஆவது கூட்டத்தொடரில் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்அரசின்

இதுவரை சாத்தியமற்ற ஒன்றாக இருக்கிறது.

"எனவே, அரசாங்கம் புதிய தேர்தல் முறையில் மாகாண சபைகள் தேர்தலை நடத்த முற்பட்டால் அதற்கு நீண்ட காலம் செல்லும். அவ்வாறு இல்லாது, தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமாயின், பழைய எல்லை நிர்ணயத்தை அவ்வாறே ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில், பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படும் விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ், மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்த முடியும்.

"இதற்காக இலங்கை தமிழ் அரசு கட்சியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ள தனிநபர் பிரேரணைகளை, ஏற்றுக் கொண்டால், மாகாண சபைகள் தேர்தலை நாளையேனும் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக உள்ளது" - என்றார். (ஐ)

## தாஜுதீன்...

தாஜுதீன் கொலை தொடர்பான விசாரணை தொடர்ச்சியான சச்சரவுகள் இல்லாமல் முடிக்கப்பட வேண்டும். அரசாங்கம் அதை அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்துவது தவறு. ஆனால், அது நல்லெண்ணத்துடன் விசாரிக்கப்பட்டால் நல்லது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்த விடயத்தை ஊடகங்களுக்கு விளக்குவதை நான் பார்த்தேன். அவர் அந்த விடயங்களை ஊடகங்களுக்கு விளக்குகிறார். நீதிமன்றத்தில் விளக்க வேண்டிய விடயங்களை அவர் ஏன் ஊடகங்களுக்கு விளக்குகிறார்? அரசாங்கத்தின் தேவைகளுக்காகவும் விளம்பரத்துக்காகவும் அவர் அதைச் செய்கிறார்.

இந்த அரசாங்கம் நீதித்துறையின்மீது செல்வாக்கு செலுத்துவதாக பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் தெரிவித்தனர். திட்டமிட்ட குற்றம் ஒன்று நடந்திருந்தால் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் அரசியல் ஆதாயம் பெற குற்றம் நடந்த இடத்துக்குச் சென்று, விசாரணை பற்றித் தெரிவிப்பதுபோல் நடிப்பார்.

இந்த விடயங்களை நீதிமன்றங்களுக்குத் தெரிவித்து விசாரிக்க வேண்டும். பொலிஸ்துறை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்காக வேலை செய்கிறது - இவ்வாறு தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்க அவர் அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

## வல்லிபுர...

நிகழ்த்தப்பட்டன. காலை 7:30 மணியளவில் வசந்த மண்டப பூசை ஆரம்பமானது. தொடர்ந்து காலை 9:30 மணியளவில் பக்தர்களின் "கோவிந்தா" கோஷம் விண்ணைப் பிளக்க சக்கரத்தாழ்வார் தேர் ஏறி வலம் வந்தார்.

இதன்போது, நூற்றுக்கணக்கான அடியவர்கள் அங்கப்பிரதிஷ்டை, பால் காவடி, செடில்காவடி, தூக்கு காவடி, கற்பூரச்சட்டி ஏந்தி தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

வல்லிபுர ஆழ்வார் தேர்த் திருவிழாவில் பக்தர்கள் கலந்து கொள்ள வசதியாக இலங்கை போக்குவரத்து சபை, தனியார் போக்குவரத்து சங்கம் என்பன விசேட போக்குவரத்து வசதிகளை செய்திருந்தன.

மக்களுக்கான பாதுகாப்பு ஒழுங்குகளை காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் பருத்தித்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர், பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரின் கண்காணிப்பின் கீழுள்ள பொலிஸ் குழுவினர் நெறிப்படுத்தினர்.

இதேவேளை, இன்று பிற்பகல் சமுத்திர தீர்த்தம் நடைபெறவுள்ளது. இதிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு விருது!

கொழும்பு, ஒக். 06

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு, உலகின் மிகச் சிறந்த தேர்தல் ஆணைக்குழுவிற்கான விருதை வென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அரங்கில், ஜனநாயகம் மற்றும் தேர்தல் செயற்பாடுகளில் சிறந்து விளங்கும் ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்படும் இந்த கௌரவமான விருதை, இலங்கை தேர்தல் ஆணைக்குழு பெற்றுள்ளது.

## றக்பி...

போதைப்பொருள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களை தனது நிலத்தில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சம்பத் மன்னம்பேரி வெளியிட்ட தகவல்களை தொடர்ந்தே தாஜுதீன் கொலை தொடர்பில் புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை வேட்டையாடுவதற்காக வசீம் தாஜுனின் கொலை சம்பந்தமான விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. கொலை சம்பந்தமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அதன்பின்னர், அதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். கொலையுடன் தொடர்புடையவர்களுக்கே தற்போது, அதன் உண்மை தெரியும்.

சம்பத் மன்னம்பேரியிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவர் வாய்திறக்க ஆரம்பித்திருக்கிறார். ஆகவே, விசாரணை அதிகாரிகள் தங்களுடைய முழுமையான விசாரணைகளை நிறைவு செய்தபின்னர் உரிய நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள். அதற்கும் ஆளும் அரசியல்வாதிகளுக்கும் தொடர்பில்லை. நாங்கள் கடந்த அரசியல்வாதிகள் போன்று விசாரணைகளில் தலையீடுகளை செய்வதில்லை - என்றார். (ஐ)

## நிறைவேற்று...

நீக்குவதற்கு பதிலாக அதனை மேலும் பலப்படுத்தும் நடவடிக்கைகளையே தற்போது, அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கம்பஹாவில் மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கஜூ உண்பதற்காக கோடிக்கணக்கில் பணம் செலவிட்டார் என்று இந்த அரசாங்கம் குற்றஞ்சாட்டியது. ஆனால், தற்போது ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அதனைவிட பெருந்தொகை பணத்தை செலவிட்டிருக்கிறார். நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாகக் கூறிக் கொண்டு ஆட்சியேற்றவர்கள் இன்று புதிய அரசமைப்பை உருவாக்குவதாகக் கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு பதிலாக அதனை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அன்று மக்களிடம் கூறிய அனைத்தையும் மறந்து நிறைவேற்றதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளுக்கு ஓரளவுக்கேனும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். எவ்வாறிருப்பினும், கடந்த காலங்களில் இந்த சிறப்புரிமைகள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

எனவே, இதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் போது அவற்றை அரசியல் பழிவாங்கல்களுக்காக முன்னெடுக்காமலிருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## வட கிழக்கில்...

அரசு இந்த நாட்டில் இருந்தது. அதன் பின்னால் போதைப்பொருள் வியாபாரிகளும் ஊழல்வாதிகளும் ஒளித்திருந்தனர். இப்போது, போதைப் பொருளை கட்டுப்படுத்தும் வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அண்மையில், ஜப்பானுக்கு சென்ற ஜனாதிபதி வடக்கு, கிழக்கில் 100 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கையை எடுத்துள்ளார். அரசியல்வாதிகளிடம் அதிகாரம் இருப்பதைவிட மக்களின் கைகளில் அதிகாரம் இருக்கவேண்டும் அதுவே, எமது அரசாங்கத்தின் விருப்பம் .

இந்த அரசாங்கத்தால் பாராளுமன்ற ஓய்வூதியம் நிறுத்தப்படுகின்றது. அதாவது, மக்களால் நிராகரிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்களின் வரிப்பணத்தில் இருந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அது, நிறுத்தப்படுகிறது.

இங்கிருந்து வெளிநாடுகளுக்கு வேலை தேடி இளைஞர், யுவதிகள் செல்கின்றனர். போதைப் பொருளைக் கட்டுப்படுத்தி எமது நாட்டிலேயே தொழிற்சாலைகளை உருவாக்கும்போது வெளிநாடுகளிலிருந்து, இங்கு வேலை வாய்ப்புகளைத் தேடி வருகின்ற நிலைமை உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## நீதியை...

சமூகத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறும் 60 ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை தொடர்பான முக்கிய குழு நாடுகள் இலங்கையை முறையான மனித உரிமைகள் பேரவை வழிமுறைகளை முன்மொழிய வலியுறுத்த வேண்டும். குறிப்பாக, பேரவையின் நிகழ்ச்சி நிரல் 4இன் கீழ் இலங்கைக்கான விசேட அறிக்கையாளரை நியமிக்க வேண்டும்.

முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் கோரியபடி, இலங் கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்க வேண்டும். 2008 டிசெம்பர் முதல் 2009 மே மாதம் வரை இலங்கை அரசு இலட்சக்கணக்கான தமிழர்களை கொன்றதன் மூலம் ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்தது.

இந்த இனப்படுகொலைக்கு ஈழத் தமிழர்கள் சர்வதேச - பாரபட்சமற்ற - நீதியான விசாரணைகளை கோருகின்றனர். கடந்த 16 ஆண்டுகளாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றிடம் முறையிட்டு வருகின்றனர்.

ஈழத்தமிழர்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதையும் நிலைமாறு கால நீதியை மேம்படுத்துவதையும் உறுதி செய்வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவாக தமிழ் சிவில் சமூகத்துக்கு முழு ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்க அனைத்து உறுப்பு நாடுகளையும் கேட்டுக்கொள்கிறேன்.

ஐ. நா. பொதுச் சபையின் 3ஆவது குழு உறுப்பினர்கள், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்க வேண்டும். இலங்கை மீதான மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்கு நிதி உதவி அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தவிர, யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தை நடத்தினர். இதன் இறுதி நாளில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகளுக்கு சர்வதேச நீதி கோரப்பட்டது. இதன்போது, தமிழ் தாய்மார் மனித உரிமைகள் பேரவையின் வரைவு தீர்மானத்தையும் இலங்கை குறித்த ஆணையாளரின் இறுதி அறிக்கையையும் எரித்தனர் என்றும் அங்கு அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## அரச அடக்குமுறைக்கு எதிராக கொழும்பில் மாபெரும் பேரணி!

### 25 கட்சிகள் ஒன்றிணைந்து தீர்மானம்

கொழும்பு, ஒக். 06

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்து வரும் சர்வாதிகார அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்த மாபெரும் எதிர்ப்பு பேரணியை கொழும்பில் நடத்து வதற்பு தீர்மானித்துள்ள எதிர்க்கட்சிகள், இது குறித்து விசேடமாக கலந்துரையாடியுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிர மசிங்க, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உட்பட முக்கிய அரசியல் கட்சிகள் கொழும்பில் ஒன்று கூடி கலந்துரையாடிய போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள், உறுப்பினர்களின் விசேட சந்திப்பு மற்றும் இரவு விருந்துபசார நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பில் உள்ள ஒரு தனியார் ஹோட்டலில் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபே வர்தனவின் அழைப்பின் பேரில் இந்த நிகழ்வில் 25 இற் கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந் துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், மற்றும் ரணில் விக்கிரமசிங்க உட்பட முக்கியஸ் தர்கள் இருந்துள்ளனர். இதன் போது சமகால அரசியல் விடயங்கள் மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைள் உட்பட முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் மாபெரும் பேரணி ஒன்றை கொழும்பில் நடத்துவதற்கு இந்த கலந் துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது. அதே போன்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக தொடர்ந்தும் செயல்படுவதற்கான தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

குறிப்பாக எதிர்க்கட்சியாக ஒன்றிணைந்து எதிர்கா லத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சில முக்கியமான கூட்டு நடவடிக்கைகள் குறித்தும் கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன.

இந்தச் சந்திப்பில் சமர்ப் பிக்கப்பட்ட கிட்டத்தட்ட அனைத்து யோசனைகளுக் கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நமால் ராஜபக்ஷ உள்ளிட்ட தலைவர்கள் இணக்கத்தை தெரிவித்தனர்.

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் அரசால் தொடர்ந்து செயற்படுத்தப்படும்

### எரிசக்தி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 06

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் புதுப் பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் தொடர்ந்து செயற்ப டுத்தப்படும் என்று எரிசக்தி அமைச்சர் பொறியாளர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அந்தத் திட்டங்களால் மக்களுக்கு ஏற்படும் பிரச்னைகள் மனிதாபிமான ரீதியாக பரிசீலிக்கப்பட்டு அவற்றைத் தீர்க்க அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

காலியின் ஹியார பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 5 மெகாவாட் சூரிய மின்சக்தி திட்டத்தை நேற்று முன் தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி ஒரு தேசியத் தேவை. தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். அனைவரும் அதன் பெறுமதியை புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு திட்டமும் இதேபோன்றதுதான். நாங்கள் அந்தத் திட்டத்தை நல்லெண்ணத்துடனும் வெளிப்படையா கவும் தொடங்கினோம். அதே நேரத்தில் ஊழியர் உரிமைகள் மற்றும் சலுகைகளைப் பாதுகாத்தோம். மேலும் இயன்றளவில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினோம். நாட்டின் எரிசக்தித் துறையின் இலக்குகளை அடைய வேண்டுமானால், அந்த மறுசீரமைப்பு திட்டத்தை செயல்படுத்துவது அவசியம். எனவே, அந்தத் திட்டத்தை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்துவோம்-என்றார்.

(அ)

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல்

# திருத்தப்பட்ட வரைவில் 22 நாடுகள் கையொப்பம்

### ஒக்ரோபர் 8 இல் இலங்கை குறித்து தீர்மானம்

ஜெனீவா, ஒக். 06

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற் கான மனித உரிமைகள் ஆணைய கத்தின் ஆணையை நீடிப்பதற்கான, திருத்தப்பட்ட வரைவில், இணை அனுசரணை வழங்க, 22 நாடுகள் கையொப்பமிட்டுள்ளன.

கடந்த செப்ரெம்பர் தொடக் கத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரைவுத் தீர்மானத்தின் முக்கிய ஆதரவாளர்களாக, ஐக்கிய இராச் சியம், கனடா, மலாவி, மொண்டி னீக்ரோ மற்றும் வடக்கு மெசிடோ னியா ஆகியன செயற்படுகின்றன.

இந்த நிலையில் 22 நாடுகள், முக்கியமாக ஐரோப்பிய நாடுகள், ஒக்ரோபர் 1 அன்று சமர்ப்பிக்கப் பட்ட திருத்தப்பட்ட வரைவுத் தீர்மானத்துக்கு இணை அனுசர ணையாளர்களாக கையொப்ப மிட்டுள்ளன.

இலங்கைத் தீர்மானத்தை ஆதரிக்கும் 27 நாடுகளில் பத்து நாடுகள் தற்போதைய சுழற்சிக்கான, ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்க ளாக உள்ளன.

இந்தநிலையில், குறித்த தீர்மா னம் ஒக்ரோபர் 8 ஆம் திகதி பரிசீ லனைக்கு எடுத்துக்கொள்ளப்ப டவுள்ளது.

(அ)

## சாரதி அனுமதிப் பத்திர செல்லுபடி காலத்தை நீடிப்பதற்கு அரசு திட்டம்!

கொழும்பு, ஒக். 06

சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை எட்டு ஆண்டுகளில் இருந்து கணிசமாக அதிகரிக்க போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ள தாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தை ஆய்வு செய்து பொருத்தமான திட்டத்தை முன் மொழிய ஒரு தொழில்நுட்ப மதிப் பீட்டுக் குழுவும் நியமிக்கப்பட் டுள்ளது.

சாரதி அனுமதி பத்திரங்களைப் பெறும்போது விண்ணப்பதாரர்க ளின் வயது மற்றும் உடல் தகுதி யைக் கருத்தில் கொண்டு, சாரதி அனுமதி பத்திரங் களின் செல்லுப டியாகும் காலத்தை 8 ஆண்டுக ளுக்கு மேல் அதிகரிக்க திட்ட மிடப்பட்டுள்ளது.

நடுத்தர வயது மற்றும் 40 வயதுக்கு மேற்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கான புதிய விண்ணப் பதாரர்கள் மற்றும் சாரதி அனுமதி பத்திரங்களை புதுப்பிக்க வரும் விண்ணப்பதாரர் களுக்கு ஏற்ற காலத்திற்கு செல்லு படியாகும் காலத்தை அதிகரிக்க வும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக போக்கு வரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், இது ஒரு முடிவு அல்ல, ஒரு திட்டம் மட்டுமே என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், கன ரக வாகன சாரதிகளுக்கு இது பொருந்தாது என்றும், கனரக வாகன சாரதிகள் ஒவ்வொரு மூன்று வருடங்க ளுக் கும் தங்கள் அனுமதிப் பத்திரங் களை புதுப்பிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மேலும், சாரதி அனுமதிப் பத்திரங்களை பெறுவ தற்கு அவசியமான தேசிய போக்குவரத்து மருத்துவ உடற்தகுதி சான்றிதழ் அச்சிடுவதை நிறுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உடற்தகுதி சான்றிதழை ஒன்லைன் டிஜிட்டல் அமைப்பு மூலம் மோட் டார் வாகன திணைக்களத் திற்கு அனுப்பும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

உடற்தகுதி சான்றிதழை அச்சிடு வதற்கு அரசாங்கம் ஆண்டுக்கு 50 மில்லியன் ரூபாய் செலவிடுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## மாகாண சபைத் தேர்தலை நடத்த எதிரணிகள் கூட்டு அரசியல் சமர்!

கொழும்பு, ஒக். 06

மாகாண சபைத் தேர்தலை விரைவில் பெறுவதற்கு ரிய எதிரணிகளின் கூட்டு அரசியல் சமர் உக்கிரமாக முன் னெடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

'தேசிய இனப்பிரச்னைக்கான ஓர் அரசியல் தீர்வா கவே மாகாணசபைத் தேர்தல் முறைமை கொண்டுவ ரப்பட்டது. உயிர் தியாகங்களுக்கு மத்தியிலேயே இம்முறைமை கொண்டுவரப்பட்டது. எனவே, மாகாண சபை முறைமை அவசியம்.

மாகாணசபைத் தேர்தல் பற்றி எதிரணிகள் கதைக் கின்றனவா என கேள்வி எழுப்படுகின்றது. இது பற்றி நாம் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகிறோம். மாகாண சபைகளின் கீழ் நிறைய பாடசாலைகள், வைத்தியசாலை கள் உள்ளன. அம்முறைமையில் ஜனாதிபதியின் ஏதேச் சாதிகாரம் இருப்பதை அனுமதிக்க முடியாது. ஆகவே மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும். - எனவும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார். (அ)

## ஹிட்லரின் பாதையில் தேசிய மக்கள் சக்தி அரசு

### ரணில் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 06

எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு அதிகரிப்பு மற்றும் அவற்றின் ஒன்றிணைவு குறித்து அச்சம் கொண்டுள்ள அரசாங்கம், ஒரு ஹிட்லர் போக்கிலான செயற்பாட்டை வெளிப்படுத்துவதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலை வரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க கடுமையாகச் சாடியுள்ளார்.

எதிரணியினருடன் அரசியல் ரீதியான எந்தப் பிரச்சி னைகளாக இருந்தாலும், உள்ளூர் அரசியல் மேடை களில் கருத்து தெரிவித்திருக்க வேண்டும் என்றும், வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை குறித்தும் இங் குள்ள அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் விமர்ச னங்களை முன்வைப்பது முறையற்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்தக் கருத்துக்க ளைத் தெரிவித்ததோடு, தேசிய மக்கள் சக்தி அரசாங் கத்தின் தற்போதைய செயற்பாடுகளுக்கு வரலாற்று உதாரணங்களைக் கொண்டு பலத்த கண்டனம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-1933 ஆம் ஆண்டு ஜேர்மனியில் ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்தபோது, அவருக்கு 50 வீதத்திற்கும் அதிகமான ஆதரவு இருக்க வில்லை. ஹிட்லரின் கட்சி வெறும் 44 வீதமான வாக்கு களையே பெற்றது.

எனவே, தனது அதிகாரத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்காகவே ஹிட்லர் அன்று எதிர்க் கட்சிகளை அழித்தார்.

கட்சிகளை மாத்திரமல்லாமல் எதிர்க்கட்சி அலுவலகங்களையும் இல்லாதொழித்தார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், செக்கோஸ்லோவியா மற்றும் ஹங்கேரியைக் கைப்பற்ற வேண்டிய தேவை கம்யூனிஸ்ட்களுக்கு இருந்தது.

அங்கு சோவியத் படை மிக வலுவாக வேரூன்றி இருந்தது. இருப்பினும் செக்கோஸ்லாவியா நிறுவனரின் புதல்வர் வெளியுறவு அமைச்சகக் கட்டடத்தில் நான்காவது மாடி ஜன்னலிலிருந்து தூக்கி எறியப்பட்டார்.

இந்த விடயம் அன்றைய எதிர்க்கட்சி பாராளு மன்றக் குழுவில் விவாதிக்கப்பட்டது.

ஜனாதிபதியும் அவரது தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இலங்கையில் தற்போது செய்வது என்ன? ஜனாதிபதி அநுரவுக்கு வெறும் 44 வீதமான வாக்குகளே உள்ளன.

மக்கள் மத்தியில் எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு தற்போது அதிகரித்து வருகிறது. இதனைத் தடுக்கவே அவர் கைது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரவின் மற்றொரு முயற்சி நீதித்து றையை அடிபணியச் செய்வதாகும்.

குறைந்த ஆதரவு டன் ஆட்சிக்கு வந்த ஹிட்லர் தனது அதிகாரத்தைத் தக்கவைக்க எதிர்க்கட்சிகளை ஒழித்தது போலவே, தேசிய மக்கள் சக்தியும் அதே வழியில் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதாகவும், நீதித்துறை யைக் கட்டுப்படுத்த முயல் கிறது-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org